# மனித வள மேலாண்மைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

மானியக் கோரிக்கை எண். 35

## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 11 |
| 3. | தமிழ்நாடு தகவல் ஆணையம் | 21 |
| 4. | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 27 |
| 5. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் | 29 |
| 6. | ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் | 36 |
| 7. | தமிழ்நாடு லோக் ஆயுக்தா | 38 |
| 8. | ஆய்வுப் பிரிவு | 39 |
| 9. | பயிற்சி | 43 |
| 10. | முன்னோக்கி பயணித்தல் | 70 |
| 11. | முடிவுரை | 70 |

| | |
|---|---|
| 12. | <u>பிற்சேர்க்கை</u><br><br>i. வரைபடங்கள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தெரிவு விவரங்கள்<br><br>ii. நிழற்படம் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அண்ணா மேலாண்மை பணியாளர் கல்லூரியில் மிடுக்கு வகுப்புகள் மற்றும் தங்கும் விடுதிகள் திறந்துவைப்பு.<br><br>iii. நிழற்படம் – மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களால் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் துவக்கம்.<br><br>iv. நிழற்படம் – பரவலாக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி<br><br>v. வரைபடம் – பவானிசாகரில் உள்ள குடிமைப்பணி பயற்சி நிலைய பயிற்சி விவரங்கள்<br><br>vi. வரைபடம் – பரவலாக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி விவரங்கள் |

# <u>மனித வள மேலாண்மைத் துறை</u>

# <u>2022-2023 - ஆம் ஆண்டிற்கான</u>

# <u>கொள்கை விளக்கக் குறிப்பு</u>

## 1. முன்னுரை

*“நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
*தன்மையான் ஆளப் படும்“.*

(*குறள் 511 –தெரிந்து வினையாடல்*)

*(நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்த, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.)*

1(1) அரசிடமிருந்து மக்கள் எதிர்நோக்கும் பொறுப்புடைமை, செயல் ஊக்கம் மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றை அறிந்து, சிறப்பான சேவை புரியும் வண்ணம், அரசு பணியாளர்களின் செயல்திறனை மெருகேற்றிடும் நோக்கத்தில் மனித வள மேலாண்மைத் துறை செயல்படுகிறது.

மனிதவள மேம்பாட்டில் நான்கு கூறுகள் இருக்கின்றன. முதலாவது, தேர்ந்தெடுத்தலும் நியமித்தலும், இரண்டாவது, பயிற்சி அளித்தலும் பணி அளித்தலும், மூன்றாவது, மதிப்பிடுதலும் ஊதியமும், நான்காவது, ஒழுங்கு படுத்தலும் பதவி உயர்வும் ஆகும். இப்பணிகள் இத்துறையால் நிருவகிக்கப் படுகின்றன.

பணியாளர்களின் ஆற்றலை அறிவதும், திறன்களை வளர்க்க வாய்ப்புகளை உருவாக்குவதும், அவற்றை முறையாகப் பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்றுவதே அரசின் முக்கியமான பணியாகும். இப்பணியை நிறைவேற்ற, தகுதியான பணியாளர்களை தெரிந்தெடுத்து, தேவையான இடங்களில் பணியமர்த்தி உரிய பயிற்சியளித்து அவர்களை முழுமையாகப் பயன்படுத்துவதுமே மனித வளத்திற்கு மாண்பு சேர்க்கிற செயல்.

*'மகத்தான மனித வளம், அதன் மூலம் மக்கள் நலம்'*

என்பதே மனிதவள மேம்பாட்டுத் துறையின் குறிக்கோள்.

## 1(2) மனித வள மேலாண்மையில் இத்துறை மேற்கொள்ளும் செயல்பாடுகள் பின்வருமாறு:

(அ) சட்டபூர்வ பணிகள்

(ஆ) நிருவாகப் பணிகள்

(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்

(ஈ) பயிற்சி

### 1(2) (அ) சட்டபூர்வ பணிகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும், அரசு வழங்கும் சேவைகளுக்குமான இணைப்பு, மாறி வரும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இயைந்து விளங்க வேண்டும். இந்த உயிர்ப்பான இணைப்பு அரசுப் பணியாளர்களின் செம்மையான செயல்பாடுகள் மூலம் வெளிப்படுகிறது. எனவே, சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், முன்னேற்றத்திற்கு வித்திட்டு, சமச்சீர் மரபை பேணிடும் வகையில் நிருவகிக்கப்படுகிறது. அவற்றுள் கீழ்காணும் சட்டங்களும், விதிகளும் அடங்கும்.

சட்டங்கள்

- தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ் நாடு சட்டம் எண். 14/2016];
- தமிழ் நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ் நாடு சட்டம் எண்.33/2018);

1(2) (ஆ) நிருவாகப் பணிகள்

விதிகள்

விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் குறித்து ஆலோசனை வழங்குவது மனித வள மேலாண்மைத் துறையின் முக்கியப்பணியாகும். இத்துறை அரசு பணியாளர் தொடர்பான பணி விதிகள் உள்ளிட்டவற்றை பிற துறைகள் செவ்வனே கடைப்பிடிக்க கலந்தாலோசனை வழங்குகிறது. அரசுப் பணியாளர்களின் நலன் காக்கும் வகையில் அவர்களுடைய நடத்தை விதிகள் / ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை காலத்திற்கேற்ப புதுப்பித்து எளிமைப்படுத்திடும் பணியும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. இத்துறையால் நிருவகிக்கப்படும் விதிகள் பின்வருமாறு:-

## பணியாளர் தொடர்பான பணி விதிகள்

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

ii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

iii. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955.

iv. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

v. தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.

vi. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள், 1971.

vii. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள், 1952.

viii. தமிழ்நாடு பொதுப்பணிக்கான சிறப்புவிதிகள், 1969 இனம் XII மற்றும் XII-A.

ix. தமிழ்நாடு பொதுசார்நிலைப்பணிக்கான சிறப்பு விதிகள்- இனம் XXII

**அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் தொடர்பான விதிகள்**

x. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறைகள், 1954

xi. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005

xii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012

xiii. தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017

xiv. தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.

**அலுவல் விதிகள், நடத்தை விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் புதுப்பித்தல்**

தற்போதுள்ள நவீன தொழில்நுட்பம் மற்றும் மேன்மையானக் கல்வித் தரம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக, அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் மற்றும் பதவி உயர்வு பெறுபவர்களின் தகுதித்தன்மையில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. எனவே தற்போதைய

சூழ்நிலைக்கேற்ப, அரசுப் பணிகளுக்கான தெரிவுமுறைகள் மற்றும் நுழைவுப் பணியிடங்களுக்கான கல்வித்தகுதியினை உயர்த்துவது குறித் , பணி விதிகளை மறுபரிசீலனை செய்து தேவையற்ற பகுதிகளை நீக்கி நாளது தேதிவரையிலான திருத்தங்களை மேற்கொள்ளவும், பரிந்துரை அளிக்க, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களை கொண்ட ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன.

1(2)(இ) ஆலோசனை வழங்கும் இனங்கள்:-

மாநிலம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான பணியாளர்களை கொண்ட அரசு இயந்திரத்தை சிறப்பாக ஒருங்கிணைத்து கையாளும் வகையில், அரசுப் பணிகளில் நடைமுறைகளை சமச்சீராக கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் உள்ளிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வரையறுத்து செயல்படுத்தும் ஒரு நிருவாகத் துறையாக இத்துறை இருப்பதால், பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் சட்டக்கூறுகள் உள்ளிட்ட

ஏனைய பின்வரும் நேர்வுகளில் இத்துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:-

- பல்வேறு பதவிகளுக்கு காலிப் பணியிடமதிப்பீடு மற்றும் தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரித்தல்;
- பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் தெளிவுரைகள் வழங்குதல்;
- அடிப்படை விதிகளில் தெளிவுரைகள் வழங்குதல்;
- முதுநிலை திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்;
- சிறப்பு / தற்காலிக விதிகளை உருவாக்கவும் திருத்தங்கள் மேற்கொள்ளவும் ஆலோசனை வழங்குதல்;
- ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.

1(2)(ஈ) பயிற்சி

அரசுப் பணியாளர்களின் அன்றாட பணிகளிலும் அவர்கள் எதிர்காலத்தில் வகிக்க வேண்டிய பொறுப்புகளிலும் பணித்திறனை மேம்படுத்த, பயிற்சி அளிப்பது இத்துறையின் முக்கியமான செயல்பாடாகும்.

அரசுப் பணியாளர்கள் பணியில் சேரும்பொழுதே, அவர்களின் அடிப்படை திறனை வளர்த்துக் கொள்ளவும், குறிப்பிட்ட துறைகளில் அவர்களின் திறமையையும், மதிப்பையும் கூட்டவும், சவால்களை எதிர்நோக்கும் திண்ணம் கொண்டவர்களாக மேம்படுத்தவும், அவர்களுக்கு பின்வரும் பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

- அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பணியில் சேரும் போது அடிப்படைபயிற்சி
- பணியில் உள்ள அரசுப்பணியாளர்களுக்கு கட்டாயப்பயிற்சி
- தேவைக்கேற்ற புத்தாக்கப் பயிற்சிகள் (தகவல் அறியும் உரிமை சட்டம், மின் ஆளுமை, இணைய பாதுகாப்பு, போன்றவை)

1(3) <u>இத்துறையின் குறிக்கோள்கள் பின்வரும் அரசமைப்பு, சட்டரீதியான அமைப்புகள் மற்றும் துறைத் தலைமையிலான நிருவாக அமைப்புகளால் செயல்படுத்தப் படுகிறது</u> :-

<u>அ) அரசமைப்பு நிறுவனம்</u>

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**ஆ) சட்டரீதியான அமைப்புகள்**

- தமிழ்நாடு தகவல் ஆணையம்
- தமிழ்நாடு லோக் ஆயுக்தா
- விழிப்புப்பணி ஆணையம்
- ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

**இ ) துறைத் தலைமைகள்**

i. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

ii. பயிற்சித்துறைத் தலைவர்

பயிற்சித் துறை தலைவரின் கட்டுப்பாட்டில் பின்வரும் நிருவாக அமைப்புகள் இயங்குகின்றன :-

- ✓ அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி
- ✓ அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்
- ✓ அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்
- ✓ போட்டித் தேர்வு பயிற்சி மையம்

## 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்கள் கொண்டதாகும். தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் நிருவகிக்கப்படுகின்றன. தற்போது தேர்வாணையம் தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இயற்கை இடர்பாடாக இருந்தாலும் சரி, செயற்கை விபத்தாக இருந்தாலும் சரி, மக்கட் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக இருந்தாலும் சரி, கட்டமைப்புகளை விரிவாக்கும் களப்பணிகளாக இருந்தாலும் சரி, அரசு தம் பணியாளர்களைக் கொண்டு மகத்தான பணிகளை மேற்கொண்டு வருகிறது. மக்கட் சேவை அனைத்திலும் அரசே முன் நிற்கிறது. அத்தகைய பணிகளை ஆற்றுவதற்குத் தகுதி வாய்ந்த நபர்களைத்

தேர்ந்தெடுக்கும் சீரிய பணியில் தேர்வாணையம் முன்னோடியாகவும் முதன்மை அமைப்பாகவும் விளங்குகிறது.

2(1) பொதுவான பணிகள்

அரசுப் பணிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்வது மட்டுமின்றி அப்பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளையும் நடத்தி அவர்களை அரசுப்பணியின் முழு உறுப்பினராக வழி வகை செய்கிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது குறித்தும், அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்தும் அரசுக்கு ஆலோசனையினை தேர்வாணையம் வழங்குகிறது.

இதைத்தவிர்த்து, ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பாக டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரியில் மாணவர்களுக்கான நுழைவுத்

தேர்வுகளையும், அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநில பணிகள் சார்ந்த அலுவலர்களுக்கான தமிழ் மொழித் தேர்வுகளையும் ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது.

ஆண்டு திட்ட அட்டவணை

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்து கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் தேர்வாணையம் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது. மேலும், போட்டித் தேர்வுகளுக்காக தயாராகும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக குறும்படம் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

2(2) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்

வேலை வாய்ப்பினை எதிர்நோக்கி காத்திருக்கும் தமிழக இளைஞர்களுக்கு தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகள் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்படுவதில் தேர்வாணையம் முனைப்புடன் செயல்படுகிறது.

**<u>தொழில் நுட்ப அடிப்படையிலான பாதுகாப்புகள்:-</u>**

- தேர்வு நடைமுறைகளில் கண்காணிப்பினை பலப்படுத்தும் பொருட்டு, தேர்வு நடைபெறும் அனைத்து தேர்வுக்கூடங்கள் / அறைகள், ஒளிப்பதிவுக் கருவிகளின் வழியாக கண்காணிக்கப்படுகின்றன.

- அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறி விடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகின்றன.

- வெளிமாவட்ட மையங்களிலிருந்து தேர்வாணையத்திற்கு மந்தணத்தன்மை கொண்ட பொருட்களை கொண்டுவரும் வாகனங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, முழுவதும் பதிவு செய்யப்படுகிறது.

- தேர்வு தொடர்பான பொருட்களை கொண்டு வரும் வாகனங்கள் மற்றும் அவற்றின்

நகர்வுகளை GPS டிராக்கர்ஸ் மூலம் கண்காணிக்க ஜி.பி.எஸ் லாக் மூலம் திறந்தும் மூடும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ஜி.பி.எஸ் (GPS) லாக் திறப்பதற்கான கட்டளைகள் தேர்வாணைய அலுவலகத்தில் இயங்கும் கண்காணிப்பு குழுவால் வழங்கப்படுகிறது.

- தேர்வு தொடர்பான மந்தணத்தன்மை கொண்ட பொருட்களை கொண்டு வரும் வாகனங்களை ஒரு வருவாய் அலுவலர், காவல் துணை ஆய்வாளர், தேர்வாணைய அலுவலர் ஆகியோர் கொண்ட வழிக்காவல் குழு (Escort) மூலம் பின்தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

<u>2(3) ஒரு முறை பதிவு செய்தல்</u>

(i) <u>பதிவுகளும் தரவுகளும்</u>

- ✓ தேர்வர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எளிதாக வெளிப்படைத் தன்மையுடன் விளங்க ‘ஒரு முறை பதிவு

செய்தல்' (One Time Registration) முறை செயல்பாட்டில் உள்ளது. அதில் தேர்வர்கள் தமது அடிப்படை விவரங்களை கையொப்பம் மற்றும் புகைப்படத்துடன் நிரந்தரமாக தரவுதளத்தில் பதிவு செய்யலாம். இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப்பதிவு அடையாள விவரங்களை (Identification) உருவாக்குவதை தடுக்கும் வகையில், விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பதிவுடன் ஆதார் விவரங்களை இணைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ii) <u>இணைய வழி விண்ணப்பம்</u>

- ✓ தேர்வாணையம், இணைய வழியில், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப் படுத்தியுள்ளதால் தேர்வர்களுக்கு நேரும் பயணச்செலவும், கால விரயமும் தவிர்க்கப்படுகிறது.

- ✓ அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

(iii) <u>தேர்வர்களின் பங்கேற்பு</u>

- ✓ தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய உத்தேச விடைகள் (Answer Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

- ✓ தேர்வர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

- ✓ கொள்குறித் தேர்வுகள் முடிந்த பின்னர் தவறான வினாக்கள் மற்றும் விடைகள் குறித்து தேர்வர்களின் கருத்துகளை இணைய வழியில் பெறும் நடைமுறையை அறிமுகப்படுத்தியதால் இறுதி விடைகள் (Final Answer Keys) விரைவாக வெளியிடப்படுகின்றன.

(iv) <u>தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கலந்தாய்வு</u>

- ✓ அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதுடன், காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் உடனுக்குடன் வெளியிடப்படுகிறது.

(v) <u>மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள்</u>

- ✓ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுத்துள்ளது. தேவை ஏற்படின், உதவியாளர்களும் வழங்கப்படுகின்றனர். மேலும், எழுத்துத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி விண்ணப்பதார்கள் பயன்பெறும் வகையில் தேர்வு எழுதுவதற்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது.

<u>2(4) துறை பதவி உயர்வுக் குழு</u>

அரசுப் பணியாளர்களின் பணி சார்ந்த முன்னேற்றத்திற்கும் தேர்வாணையம் தனது

பங்களிப்பினை வழங்குகிறது. துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச் சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

பதவி உயர்வு மற்றும் மாறுதல் மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி- A ஊதிய நிலை 25 -க்கு மேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல், அந்தந்த துறைகளுக்கான பதவி உயர்வு குழுவின் முன் வைக்கப்படுகிறது.

<u>2(5) துறைத் தேர்வுகள்</u>

துறைத் தேர்வுகளை செம்மைப்படுத்தும் பொருட்டு, கணினி அடிப்படையிலான தேர்வுமுறையையும் தேர்வாணையம் மே 2021 முதல் அறிமுகப்படுத்தி நடத்திவருகிறது.

2(6) தேர்வாணையத்திற்கு கூடுதல் பணிகள்

அரசுத் துறைகள் மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களின் தெரிவு சீராக அமைய வேண்டி தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும் வகையில் தேர்வாணையத்திற்கு கூடுதல் பணி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம், 2022 மற்றும் அதற்குரிய விதிகள் ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டம் 17.03.2022 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

2(7) ஆண்டறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

2(8) தெரிவுகளில் போக்கு

மாநிலத்தின் தெரிவு விவரங்கள் வரைபடங்களாக பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையை குடிமக்களுக்கு வழங்குவதற்கும், ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழிவகுக்கின்றது. ஆளுமையின் பல்வேறு அடுக்குகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய நற்பண்புகளில் பொதிந்துள்ள மக்களாட்சியின் உண்மையான உணர்வை இது வெளிப்படுத்துகிறது. இதனடிப்படையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, மாநில தகவல் ஆணையத்தால் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், அனைத்துத் துறைகளும் தத்தமது துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் நலதிட்டங்கள் மற்றும் இதர பொது முக்கியத்துவம் வாய்ந்த விவரங்கள் அனைத்தையும் தாமாகவே முன்வந்து வெளியிட்டுவருகின்றன.

3(1) தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன் படி 07.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. தகவல் ஆணையம் ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் ஆறு தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

3(2) பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரும் தகவலை விரைவாக வழங்குவதற்கு பொறுப்பானவர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு இரண்டாவது நிலையில் உள்ளது. இரண்டாவது மேல்முறையீடு புகார் / மனு தாக்கல் செய்யப்படும்போது தகவலை வழங்குவதை உறுதிசெய்ய மாநில தகவல் ஆணையம் மூன்றாவது நிலையில் உள்ளது.

எந்தவொரு பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துத் தகவல்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படலாம். மேலும், இச்சட்டமானது பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்வதற்கும் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அதிகாரம் அளிக்கிறது.

3(3) இணைய வழி சேவை

மேற்படி உரிமையை எளிதாக பெறும்வகையில் இச்சேவைகள் இணையவழியிலும் படிப்படியாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணையவழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

25.06.2021 முதல் மனித வள மேலாண்மைத் துறையில் மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணையவழியில் பெறப்பட்டு தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வசதி 15.02.2022 முதல் நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி, மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை மற்றும் பள்ளிக் கல்வி ஆகிய ஐந்து துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து 20.04.2022 முதல் 11 துறைகளில் இணையவழி சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிற துறைகளுக்கும் இது விரிவாக்கம் செய்யப்படும்.

இரண்டாவது மேல் முறையீடுகளையும் இணையவழியில் (Online) தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்குப் பட்டியல்கள் மற்றும் முடிவுகள் ஆணையத்தின் இணையதளத்தில் (www.tnsic.gov.in) பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மேலும் ஆணையத்தால் இம்மனுக்கள் காணொளி (Virtual Mode) முறையிலும் விசாரிக்கப்படுகின்றன.

3(4) பார்வைத்திறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் ஆணைகள், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள "பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவன"த்தின் ஒருங்கிணைப்புடன் இச்சேவை வழங்கப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வில் இவ்வாணையம் நாட்டிலேயே முன்னோடியாக திகழ்கிறது.

3(5) பொது மக்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு, விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை வழங்கும் வகையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வளாகத்தில் ஓர் உதவி மையம் (Help Desk) செயல்பட்டு வருகிறது. மேலும், ஆணையத்தில் இரண்டாவது மேல்முறையீடுகளின் நிலையை சரிபார்க்கவும் உதவுகிறது.

3(6) இச்சட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றவும், நிலுவையில் உள்ள மனுக்களை குறைக்கவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மற்றும் மேல்முறையீடுகளை தீர்ப்பதற்கு மாநிலம் முழுவதும் உள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

3(7) ஆணையத்தின் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்ற பேரவையில் வைக்கப்படுகிறது.

3(8) நிலையான வளர்ச்சி இலக்குகள்:-

"மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் 3 லட்சத்திற்கும் அதிகமான தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் பெறப்பட்டு அவை, தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி, பொதுத் தகவல் அலுவலர்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

- ✓ "பொதுமக்கள் அரசின் செயல்பாடுகளை தெரிந்திருத்தல் வேண்டும் என்ற குறிக்கோளை அடையும்பொருட்டு, உரிய தரவுகளை அரசு துறைகள் தாமாகவே முன்வந்து இணையதளத்தில் வெளியிட்டுள்ளன. எனவே மக்கள் பொது அதிகார அமைப்புகளை தொடர்ந்து அணுகுதல் குறையும், மேலும், விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் குறையும் (குறியீடு எண்.16.6.3).
- ✓ பொது மக்களால் கோரப்படும் தகவல்களை, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்புக்குள் அளிக்க பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே தகவல் விவரங்களின் இணக்க சதவீதம் உயரும் (குறியீடு எண்கள்.16.6.2 மற்றும் 16.10.1).

## 4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

*தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்*

*ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.* *குறள் (561)*

*(நடைபெற்ற குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து, மீண்டும் அவை நிகழா வண்ணம் அக்குற்றங்களுக்கேற்பத் தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும்.)*

4(1) பொது மக்களுக்கான அரசின் திட்டங்கள் யாவும் சீராக சென்றடைய பணியாளர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அவர்கள் இப்பணியை உரிய காலத்திற்குள் நேர்மையுடன் மேற்கொள்ள விதிகள் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை பணியாளர்கள் பேணும் முறையைக் கண்காணித்து செம்மைப்படுத்தும் நோக்குடன் மாநில விழிப்புப்பணி ஆணையம் 1965-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

பொதுப் பணிகளில் அரசுப் பணியாளர்கள் நிருவாக ரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான பணிகளாகும். இவ்வாணையத்தின் வரம்பிற்குள் அரசுப் பணியாளர்கள் மட்டுமின்றி, மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவையும் அடங்கும்.

<u>4 (2) விழிப்புப் பணி ஆணையத்தின் கடமைகள்</u>:

i. பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்:

ii. ஊழல் தொடர்பான நேர்வுகளுக்கான தரவுகளை உரிய முகமைகள் மூலம் சேகரித்தல்.

iii. தமது செயல்பாடுகள் மற்றும் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல்.

## 5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

பொது நிருவாகத்தில் நேர்மையையும் தூய்மையையும் உறுதி செய்திட, தொடர் கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் தண்டனைகள் வழங்குதல் உள்ளிட்ட நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் 1964 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

5(1) ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை திறம்படக் கையாளும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள இவ்வியக்ககம், காவல் துறை இயக்குநர் (DGP) நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் பின்வரும் அலுவலர்களைக் கொண்டு இயங்குகிறது:-

- ✓ இணை இயக்குநர்
- ✓ காவல் துறை தலைவர்கள்
- ✓ துணை இயக்குநர்
- ✓ காவல் கண்காணிப்பாளர்கள்
- ✓ துணை காவல் கண்காணிப்பாளர்கள்
- ✓ சட்ட அலுவலர்கள்

கடந்த ஆண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்கள் உட்பட மாநிலம் முழுவதும் இவ்வியக்ககத்தின் கீழ் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

5(2) இந்த இயக்ககத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:-

- ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின் மீது விசாரணைகள் / புலனாய்வுகள்
- ஊழல் விசாரணையில் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களை சேகரித்தல்
- நுண்ணறிவு தகவல்கள், குற்றங்கள் குறித்த தரவுகளை புலனாய்வுக்குப் பயன்படுத்துதல்
- குறிப்பான புகார்களில் உரிய முறை பின்பற்றி தவறிழைப்போர்களை பொறி வைத்துப் பிடித்தல்
- மக்கள் பிரதிநிதிகள் மீதான வழக்குகளை விசாரிப்பதற்காக 1996 முதல் ஒரு சிறப்பு புலனாய்வு பிரிவு (SIC) இயங்கிவருதல்.
- விழிப்புப்பணி ஆணையம், லோக்ஆயுக்தா மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும், புகார்கள்

அனைத்தும் ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன் கீழ் புலனாய்வு செய்தல்.

- மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் புகார்களையும் ஏற்று புலனாய்வு செய்தல்.

<u>சிறப்பு நீதிமன்றங்கள் – வழக்குகளில் விரைந்த தீர்வு</u>

- விசாரணைகளின் அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்து, எந்தவொரு விசாரணையும் காலத்தே இறுதி செய்யப்பட்டாலன்றி அதன் பலனை நிருவாகம் எய்துவது அரிதாகும். எனவே, விசாரணையைத் தொடர்ந்து வழக்குகளையும் துரிதமாக முடிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை கருதி பின்வரும் எட்டு மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுகின்றன. அவை, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களாகும். ஏனைய மாவட்டங்களில் முதன்மை அமர்வு நீதிமன்றங்களிலேயே ஊழல் தொடர்பான வழக்குகளும் விசாரணை செய்யப்படுகின்றன. மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதிகள் மற்றும்

சிறப்பு நீதிபதிகளுக்கு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5(3) இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்குகளில் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் நிலை குறித்து ஆண்டு வாரியான புள்ளி விவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன.

5(4) காவல்துறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு மண்டலங்களை கருத்தில் கொண்டு இவ்வியக்ககத்திலும் 5 சரகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சரகங்கள் மற்றும் அவற்றின் வரம்புகளுக்குட்பட்ட மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் பின்வருமாறு :-

| வ. எண் | சரகங்கள் | மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை நகர சரகம் | 9 பிரிவுகள் (சிறப்பு புலனாய்வு பிரிவு உட்பட) |
| 2. | வடக்கு சரகம் | 10 பிரிவுகள் |
| 3. | மேற்கு சரகம் | 8 பிரிவுகள் |
| 4. | மத்திய சரகம் | 9 பிரிவுகள் |
| 5. | தெற்கு சரகம் | 10 பிரிவுகள் |

5(5) புதிய வழிமுறைகளில் புலனாய்வு

பயிற்சி

கிரிப்டோ பண பரிவர்த்தனைகள் தொடர்பான மறைக்கப்பட்ட விபரங்களை கண்டுபிடிக்கவும் பரிசீலனை செய்யவும் தேவையான விசாரணை வழிமுறைகளை (Block chain concept, data mining, etc) தெளிவுபடுத்தும் விதமாகவும் இணையதள குற்றங்களை விசாரணை செய்ய ஏதுவாகவும் விசாரணை அதிகாரிகளுக்கும் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

5(6) வல்லுநர்கள் மூலம் சிறப்புப் புலனாய்வு

வருமானவரி, வங்கிகள் மற்றும் பொருளாதார கணக்கு விவரங்கள் தொடர்பான பெருமளவிலான கணக்கு விவரங்களையும், பதிவேடுகளையும், நிறுவனங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்று கூர்ந்தாய்வு செய்யவும், மின்னணு சார்ந்த கருவிகளை கனிணி வன்பொருள், மடிக்கணிணிகள், கைபேசிகள் போன்றவற்றின் விவரங்களை கூர்ந்தாய்வு செய்யவும் இவ்வியக்கக விசாரணை அதிகாரிகளுக்கு உதவி

செய்யும் நோக்கில் (i) பட்டயக் கணக்கர்கள் (ii) ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் (iii) ஓய்வு பெற்ற வருமான வரி அலுவலர்கள் மற்றும் (iv) இணையதள குற்ற தடயவியல் நிபுணர்கள் போன்ற பலதரப்பட்ட நிபுணர்களின் சேவைகளை இவ்வியக்ககம் பயன்படுத்துகிறது.

5(7) விழிப்புணர்வு மூலம் ஊழல் தவிர்ப்பு நடவடிக்கைகள்

ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் தவிர்ப்பு (preventive) நடவடிக்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதனை செயல்படுத்தும் வகையில் பொதுமக்கள் இளைஞர்கள், அரசுப் பணியாளர்கள் என அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது. அதன்படி ஆண்டுதோறும் பின்வரும் நிகழ்வுகளின் வாயிலாக விழிப்புணர்வு வார விழா கொண்டாடப்படுகிறது:-

- கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் தொடர்பான நிகழ்வுகள் பல அரசு அலுவலகங்களிலும், பொது

இடங்களிலும் நடத்தப்பட்டு, அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்களிடம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

- கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அதிகாரிகளால் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.
- விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய மாணவர்களின் பேரணியும், இரண்டு சக்கர வாகன பேரணியும் நடத்தப்படுகிறது.
- கண்காணிப்பு விழிப்புணர்வு பற்றி, சென்னை மெரினா கடற்கரையில் மணல் சிற்பம் உருவாக்குதல் மற்றும் தமிழ்நாடு முழுவதும் கல்லூரி மாணவர்களால் தெருமுனை பிரச்சாரங்கள் மூலமாக கண்காணிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- கண்காணிப்பு விழிப்புணர்வு பற்றிய குறும்படங்கள் சமூக ஊடகத்தில் வெளியிடப்படுகின்றன.

## 6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்

6(1) மாநில அரசிலும், நகராட்சி நிர்வாக அமைப்புகளிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் இயக்ககத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு, தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கான அதிகாரங்களை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன் படி பெற்றுள்ளது. இது ஒரு நீதிமுறை சார்ந்த அமைப்பாகும்.

6(2) சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் செயல்படும்

இத்தீர்ப்பாயங்களில் வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்குரைஞர்களின் (Prosecutors for Disciplinary Proceedings) சட்டக் கருத்துகள் / ஆலோசனைகள் பெறப்படுகின்றன. வழக்கின் மீதான விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிர்வாகத் துறைக்கு தீர்ப்பாயத்தால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒழுங்கு நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளை அத்துறை பிறப்பிக்கும்.

## 7. தமிழ்நாடு லோக் ஆயுக்தா

7(1) தூய்மையான நிர்வாகத்தையும், வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புணர்வையும், செம்மையான நிர்வாகத்தையும் உறுதிப் படுத்தும் வகையில், 2018-ஆம் ஆண்டைய தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் சட்டமன்றத்தால் இயற்றப்பட்டு, விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு லோக் ஆயுக்தா 21.04.2019 முதல் செயல்படத் துவங்கியது.

7(2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா பொது ஊழியர்களுக்கு எதிரான ஊழல் மற்றும் அது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7(3) தமிழ்நாடு லோக் ஆயுக்தா - தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

7(4) தமிழ்நாடு லோக் ஆயுக்தா சென்னை, கிண்டி, திரு.வி.க., தொழிற்பேட்டை, சிட்கோ வளாகத்தில் 6 மற்றும் 7-வது தளங்களில் செயல்பட்டு வருகிறது.

7(5) மாநிலம் முழுவதிலிருந்தும் வரும் புகார்கள் லோக் ஆயுக்தா சட்டம் மற்றும் விதிகளின் படி பரிசீலனை செய்யப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 8. ஆய்வுப் பிரிவு

8(1) அரசு அலுவலகங்களில், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், திறனை மேம்படுத்தவும், தாமதங்களைத் தவிர்க்கவும், தலைமைச்செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள் காலமுறையில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

8(2) மனித வள மேலாண்மைத் துறையின் அதிகார பகிர்வின் கீழ் ஆய்வுக்குழுக்கள் இரண்டு அடுக்குகளாக பணிபுரிகின்றன. தலைமைச் செயலகத்தில் மூன்று ஆய்வுக்குழுக்கள் இயங்கி வருகின்றன. மாவட்டங்களில் உள்ள 11 ஆய்வுக் குழுக்கள், துணை ஆட்சியர் தலைமையில், வட்டாட்சியர் நிலையில் உள்ள துணை ஆய்வுக்குழு அலுவலர் உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

8(3) <u>முதல் அடுக்கு - தலைமைச் செயலக ஆய்வுப் பிரிவுகள்</u>

வருடாந்திர ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி, தலைமைச் செயலகத்தில் அரசு கூடுதல் செயலாளர்/

அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் ஆய்வுக் குழுக்கள் இரண்டு கட்டங்களாக ஆய்வுகள் மேற்கொள்கின்றன. ஒவ்வொரு ஆய்வுக்குழுவும் தனித்தனியே முதனிலை ஆய்வுக் குறிப்புகள் தயார்செய்து, அதன்மீது குறைகளைவு அறிக்கை பெற்று, இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தலைமையில் இறுதி ஆய்வு மேற்கொள்கிறது. அவர் அளிக்கும் பொதுக்குறிப்பின் மீது தொடர் நடவடிக்கையை, தொடர்புடைய தலைமைச் செயலக நிர்வாகத்துறை மேற்கொண்டு உரிய அரசாணை பிறப்பிக்கின்றது.

<u>2021-22- ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்</u>:-

| ஆய்வுகள் | முடிவுற்றது | |
|---|---|---|
| முதனிலை ஆய்வுகள் | துறைத் தலைமை அலுவகங்கள் | 13 |
| இறுதி ஆய்வுகள் | தலைமைச் செயலகத் துறைகள் | 4 |
| | துறைத் தலைமை அலுவகங்கள் | 15 |

## 8(4) இரண்டாம் அடுக்கு- மாவட்ட ஆய்வுக் குழுக்கள்

11 மாவட்ட ஆய்வுக்குழுக்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகங்களில், விரிவான ஆய்வுகள் மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கும் உதவிகரமாக இருந்து வருகின்றன.

2021-22- ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் :-

| ஆய்வுகள் | இலக்கு | முடிவுற்றது |
|---|---|---|
| விரிவான ஆய்வு | 132 | 125 |
| திடீர் ஆய்வு | 2640 | 2574 |
| மாவட்ட ஆட்சி தலைவரால் விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு அலுவலகத்துடன் ஒருங்கிணைந்த கூட்டம் | 132 | 77 |

8(5) உலகளாவிய திடீர் கொரானா பெருந்தொற்றின் காரணமாக பயிற்சிகளை நடத்துவதற்கு பொதுவான தடை விதிக்கப்பட்டிருந்ததால் இத்துறை மூலம் மாவட்டங்களில் பணியாற்றி வரும் அரசு அலுவலர்களுக்கு கடந்த இரு ஆண்டுகளில் முன்னோடி பயிற்சி, குறுகிய கால பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி – போன்ற பயிற்சிகள் நடத்தப்படவில்லை. இப்பயிற்சிகளை இந்த ஆண்டு முதல் மீண்டும் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8(6) ஆய்வுக்குழுக்களின் செயல்பாடுகளை, தொழில்நுட்ப அடிப்படையிலான மென்பொருள் கட்டமைப்பின் வரையறைக்குள் கொண்டுவர முடிவு செய்து அதன் நீட்சியாக 15 மடிக்கணினிகள் வழங்கப்பட்டு ஆய்வு அலுவலர்கள் திடீர் ஆய்வு அறிக்கைகளை இணைய வழியில் பதிவேற்றம் செய்கின்றனர்.

## 9. பயிற்சி

9(1) திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்தாலும் வைரத்தைப் பட்டை தீட்டுவதைப் போல வைராக்கியத்தைப் பட்டை தீட்டுவதற்கும், அவர்களது ஆற்றலை அவர்களே உணரச் செய்வதற்கும், அவர்களுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் திறன்களைத் தட்டியெழுப்புவதற்கும் பயிற்சி அவசியமாகிறது.

அருமறையாம் திருக்குறளில், திருவள்ளுவர் ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில்,

*சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றுங் களிறு.*

--- என்ற 597-ம் குறட்பாவில், போர் களத்தில் இருக்கிற யானை அம்புகளால் துளைக்கப்பட்டாலும் உறுதி குலையாமல் நிலை நிற்கும் எனவும்,

*பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை*
*வெரூஉம் புலிதாக் குறின்*

--- என்ற மற்றொரு குறட்பா 599-ல் பெரிய உருவம் கொண்ட யானை, கூர்மையான தந்தங்களை

கொண்டிருப்பினும் அதை விட சிறிய உருவம் கொண்ட புலியை கண்டு அச்சமுறும் எனவும் கூறுகிறார். இதன்படி, ஊக்கத்திற்கும் ஊக்கமின்மைக்கும் யானையையே உவமையாகக் கூறும் வள்ளுவர், போர்க் களத்தில் பயிற்சி பெற்ற யானையின் மாண்பினை உவந்து உரைக்கின்றார். ஆகவே, பயிற்சியின் மாண்பினை இதன் மூலம் அறியலாம்.

பயிற்சியின் மூலம் மனித வளத்தை மேம்படச் செய்யலாம் எனினும் பயிற்சிக்கும் (training) மேம்பாட்டிற்கும் (development) வேறுபாடு இருக்கிறது. பயிற்சி என்பது பணியாளர்களுக்கு நியமித்ததும் அளிக்கப்படுகின்ற ஒன்று. அது திறன்களை வளர்ப்பதற்கும், தகுதிப்படுத்திக் கொள்வதற்கும், பணிக்குத் தேவையானவற்றை கற்றுக் கொள்வதற்கும் உதவுகிற கற்றல். மேம்பாடு என்பது அறிவார்ந்த முறையில் விவரங்களை புரிந்து ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் விதமாக பணியாளர் திறன் அபிவிருத்தி அடைவதைக் குறிக்கும்.

## 9(2) பயிற்சித் துறைத் தலைவர்

அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் அலுவல் வழி பயிற்சித் துறைத் தலைவர் ஆவார். பின்வரும் பயிற்சி நிலையங்கள் பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன:-

(i) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

(ii) அ மற்றும் ஆ அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

(iii) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

(iv) அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்

(v) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

## 9(2)(i) அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி :

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-இன் கீழ் நிறுவப்பட்ட ஓர் அமைப்பாகும். 1981-ஆம் ஆண்டு தன்னுடைய முதல் அடியை எடுத்து வைத்த இந்நிறுவனம், முளைவிட்டு இன்று ஆல் போல வளர்ந்து, செழித்து, நிழல் தந்து

வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு மாநில நிர்வாகப் பயிற்சி நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசும் இதை மாநிலத்தின் முதன்மை நிறுவனமாக அங்கீகரித்திருக்கிறது.

இப்பணியாளர் கல்லூரி, மாநிலத்தில் அரசு மற்றும் அரசு துறை சார்ந்த பணியாளர்களுக்கு மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கின்ற முதன்மை நிறுவனமாகும். அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியும், அதன் ஒருங்கிணைந்த அலகுகளாக இருக்கின்ற அ மற்றும் ஆ பயிற்சி நிறுவனமும், பவானிசாகரில் அமைந்துள்ள அரசு அலுவலர் பயிற்சி நிறுவனமும் அடிப்படை பயிற்சிகளுடன் மேம்பாட்டு பயிற்சிகளையும் அளித்து வருகின்றன.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, நிர்வாகம் தொடர்பான அலுவலக நடைமுறைகள், ஒழுங்கு நடவடிக்கைகள், கோப்புகளைக் கையாளும் விதங்கள், நிலக்கையகப்படுத்துவதின் வழிமுறைகள் போன்ற அத்தியாவசியமான பயிற்சிகளை அளிப்பதோடு, பரந்துபட்ட பார்வையைப் பணியாளர்கள் பெறுவதற்கு ஏதுவாக சிறப்புப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

அரசின் பல்வேறு துறைகள் தங்கள் தேவைக்கேற்ப பயிற்சிகளையும் மேம்பாட்டு நிகழ்வுகளையும் அளிப்பதற்கு அணுகும் போது அவற்றையும் நிறைவேற்றித் தந்து பணியாளர்கள் தெளிவு பெற இந்நிறுவனம் ஊடகமாகச் செயல்படுகிறது.

<u>மண்டலப் பயிற்சி மையங்கள்:</u>

மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்து தலைமையகத்திற்கு வந்து பயிற்சி பெறுகிறபோது பணியாளர்கள் பயணம் செய்யவும், தங்குவதற்கும் கட்டமைப்புகள் தேவைப்படுவதோடு குறைந்த அளவே பயிற்சிகள் அளிக்க முடியும் என்ற நிலை இருந்தது. இதைத் தவிர்க்கும் பொருட்டு 2014-ஆம் ஆண்டு மூன்று மண்டலப் பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டு, அங்கு பணியமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. மாவட்டந்தோறும் சென்று அங்கேயே பணியாளர்களுக்குப் பயிற்சி நடத்த இம்மையங்கள் பேருதவி புரிகின்றன.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் கட்டுப்பாட்டில் தற்போது நான்கு மண்டலப் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. மதுரை, திருச்சி, சேலம்

மற்றும் செங்கல்பட்டில் தலைமையிடங்களைக் கொண்டு இயங்குகிறது. பலதரப்பட்ட பணியாளர்களையும் பயிற்சி குடைக்குக் கீழ் கொண்டு வர இவை உதவியாக இருக்கின்றன.

<u>தொடர்ந்து நடத்தப்படும் சிறப்புப் பயிற்சிகளின் விவரம்:</u>

i. சுமார் 1.20 இலட்சம் காவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ரூ.10.00 கோடிக் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2021-2022ஆம் ஆண்டிற்கு ரூ.2.70 கோடிக்கு நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டது.

ii. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அத்துறையினைச் சார்ந்த அமைச்சுப் பணியாளர்கள் ஆக மொத்தம் சுமார் 1620 பேருக்கு ரூ.3.34 கோடி செலவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

iii. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை, விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு சுமார் 965 நபர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி ரூ.39.90 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

iv. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான பயிற்சியினை சுமார் 500 அலுவலர்களுக்கு ரூ.20.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டது.

புதிய பயிற்சிகள் – 2022-23

பேரிடர் மேலாண்மையில் அளிக்கப்படவுள்ள பயிற்சிகள்:

பேரிடர் மேலாண்மை பயிற்சித் திட்டம் தொடர்பாக, இயற்கை மற்றும் மனிதனால் உருவாகக் கூடிய பேரிடர் மேலாண்மை மற்றும் ஆபத்து குறைப்பு பற்றிய பயிற்சிகள் பல்வேறு தலைப்புகளின் கீழ் 24 பயிற்சித் திட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி:

சிவகாசியிலுள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் பாதுகாப்பு/ பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மறுவாழ்வு குறித்து விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

துறைகளுக்கான புதிய மேம்பாட்டுப் பயிற்சிகள்:

பயிற்சியும் மேம்பாட்டு நிகழ்வுகளும் அளிக்கப்படாமல் உள்ள அரசுத் துறை நிறுவனங்களைக் கண்டறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு பயிற்சிகளை விரிவு படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

| | |
|---|---|
| 1. | பதிவுத்துறை |
| 2. | பள்ளிக்கல்வித்துறை |
| 3. | சுற்றுலாத்துறை |
| 4. | கலை-பண்பாட்டுத் துறை |
| 5. | உயர்கல்வித் துறை |
| 6. | சுற்றுச்சூழல் துறை |
| 7. | தொழிலாளர் நலத் துறை |
| 8. | நூலகத் துறை |
| 9. | தீயணைப்புத் துறை |
| 10. | தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானக் கழகம் |
| 11. | டாஸ்மாக் பணியாளர்கள் |
| 12. | தமிழ்நாடு மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் |
| 13. | நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் |

மேற்படி பயிற்சிகள் அத்துறையின் அலுவலர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு நடத்தப்படும். இதன் மூலம் அவர்கள் தங்கள் திறன்களைக் கூர்மைப்படுத்தி நேரத்தை மிச்சப்படுத்தி சிறப்பாகப் பணியாற்ற இயலும். அதைப் போலவே செய்தித்துறை அலுவலர்களுக்கும் தகவல் பரிமாறுவது குறித்து பல்வேறு பயிற்சிகளை அளிப்பதோடு அவர்கள் எவ்வாறு பத்திரிக்கை குறிப்புகளைத் தயாரிக்கலாம் என்று தேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்பட உள்ளது. அதைப் போன்றே மாவட்டங்களில் உள்ள குறை தீர்க்கும் பிரிவில் உள்ள அலுவலர்களுக்கு மக்களை எவ்வாறு அணுக வேண்டும் என்பது பற்றிய பயிற்சிகள் தரப்பட உள்ளன.

<u>அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் உட்கட்டமைப்புப் பணிகள்:</u>

(i) <u>பணியாளர்களுக்கான கூடுதல் குடியிருப்புகள்:</u>

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 2005-ஆம் ஆண்டு, பணியாளர்களுக்காக மூன்று அடுக்கு

கொண்ட ஆறு வாடகை குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 350 சதுரடியில் கட்டப்பட்டன. தற்போது முக்கிய பணியாளர்களுக்காக இவ்வலுவலக வளாகத்திலேயே ரூபாய் 3.50 கோடி செலவில் எட்டு கூடுதல் பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) <u>அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு உயர் அழுத்த மின்சாரம் வழங்கல்:</u>

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் அதிகபட்ச மின்தேவை மற்றும் வருங்கால மின் தேவையையும் கருத்திற்கொண்டு சீரான மின்சாரம் பெறப்படுவதற்கு உயர் மின் அழுத்த சேவை இணைப்பு ரூ.3.50 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(iii) <u>இரண்டு புதிய சிற்றுந்துகள் (32 இருக்கைகள்) வாங்குதல்:</u>

பயிற்சியாளர்களுக்கு போக்குவரத்து வசதிக்காக அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கு 2 புதிய மினி பேருந்துகள் ரூ.40 இலட்சம் செலவில் வாங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(iv) <u>உள்ளரங்கு படப்பிடிப்புத் தளம் (Indoor Studio):</u>

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் தற்போது நிகழ்நிலை (Online) வகுப்புகளை நடத்த காணொலி கூட்ட அரங்கு (Video Conference Room) பயன்படுத்தப்படுகிறது. புதிய தலைமுறையினர் அனைத்து மின்னணு சாதனங்களின் பயன்பாட்டை நன்கு அறிந்துள்ளதுடன், காட்சி ஊடகங்களில் அதிக கவனம் செலுத்துகின்றனர். மேலும் நேருக்கு நேர் வகுப்புகளில் கலந்துகொள்வதை விட மின்னணு ஊடகங்களில் மிகவும் பிரபலமானவர்கள் வழங்கும் நிகழ்நிலை (Online) சொற்பொழிவுகளைக் கேட்கிறார்கள். ஆதலால், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் உள்ளரங்கு படப்பிடிப்புத் தளம் (Indoor Studio) ரூ.49,89,814/- மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

(v) <u>மிடுக்கு வகுப்புகளும் விடுதி அறைகளும்:</u>

தற்போது வகுப்புகளை சுவை மிக்கதாகவும் கவனச்சிதறல் ஏற்படாதவாறும் நடத்துவது அவசியம். பயிற்சியில் கணினி பெரும் பங்கு வகிக்க ஆரம்பித்து விட்டது. கரும்பலகைக்குப் பதிலாக கணினிப் பலகையே தேவைப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு அண்ணா

நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் ஆறு புதிய மிடுக்கு வகுப்பறைகளும், பணியாளர்கள் அதிக அளவில் பயிற்சி பெற தங்கும் வசதி ஏற்படுத்துவதற்கு 15 புதிய அறைகளும் கட்டுவதற்காக ரூ.8.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.04.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

(vi) விடுதி அறைகள் சீரமைப்புப் பணிகள்:

வெளி மாவட்டங்களிலிருந்து வந்து தங்கும் பயிற்சியாளர்களுக்கு விடுதி அறைகள் தேவைப்படுகின்றன. வீடுகளைப் போலவே விடுதிகளும் கதகதப்பாக இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தைக் கருத்தில் கொண்டு 2005-ஆம் ஆண்டு கட்டப்பட்ட 48 விடுதி அறைகளும் புத்தம் புதிதாக பொலிவு பெறும் வகையில் ரூ.2.00 கோடி ரூபாய் மதிப்பில் சீரமைக்கப்பட்டு பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. பகலில் பயிற்சியை முடித்து இரவில் பாதுகாப்பாக அவர்கள் தங்குவதற்கு இந்த விடுதி அறைகள் ஏற்றவாறு அமைந்துள்ளன.

9(2)(ii) 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம்:

- 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையம், தொன்மை வாய்ந்த "காஞ்சி" கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட மாநிலத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் பயிற்சித் துறை தலைவரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலரால் நிருவகிக்கப்படுகிறது.

- இந்த அடிப்படை பயிற்சியில், 'அ' பிரிவு அலுவலர்களுக்கு அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, பொது நிருவாகம், மேலாண்மை விதிகள், திட்டம் - மேம்பாடு, பொருளாதாரம், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

- மேலும் ஆ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் சட்டம், அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், மேலாண்மை

விதிகள், கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி, அலுவலர்களின் நிருவாக செயல்திறனை மேம்படுத்த உதவுகின்றது.

❖ இப்பயிற்சியின் நிறைவாக அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம் ஆகிய பாடங்களில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவது பயிற்சியாளரின் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்வதற்கான ஒரு முன் நிபந்தனை ஆகும்.

❖ இப்பயிற்சி பிரிவில், 2021-2022 ஆம் நிதி ஆண்டில், 170 “அ” பிரிவு அலுவலர்களுக்கும், 439 “ஆ” பிரிவு அலுவலர்களுக்கும், ஆக மொத்தம் 609 அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ 2011-12 ஆம் ஆண்டு முதல் இதுவரை, 1384 “அ” பிரிவு அலுவலர்களுக்கும், 4271 “ஆ” பிரிவு அலுவலர்களுக்கும், ஆக மொத்தம் 5655 அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சிக்கான பாடத்திட்டம் 2005 ஆம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்படவில்லை. எனவே,

தலைமைச் செயலர் / பயிற்சித் துறைத் தலைவரின் வழிகாட்டுதலின்படி பாடத்திட்டத்தை மறுபரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அரசாணை (நிலை).எண். 5, மனித வள மேலாண்மைத் துறை, தேதி: 13.01.2022-ல் அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியின் பாடத்திட்டம், பயிற்சி கட்டமைப்பு மற்றும் கால அளவு ஆகியவை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

9 (2) (iii) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்:

- நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு பெறும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் பணியில் சேர்ந்தவுடன், அலுவலகப் பணியில் செம்மையாகவும், திறம்படவும் செயல்பட, அவர்களுக்கு அலுவலக நடைமுறை, பணி நடைமுறை, பொதுமக்கள் தொடர்பு, ஊரக வளர்ச்சி, கணக்கு ஆகியவை குறித்து அடிப்படை பயிற்சி அளித்து அவர்களது பணித்திறனை மேம்படுத்தி அரசு இயந்திரத்தை வெற்றிகரமாக செயல்படுத்திட வைப்பதே இப்பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

- அரசால் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையமானது ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், மேற்கு தொடர்ச்சி மலை புலிகள் சரணாலயம் அமைந்துள்ள பகுதியின் அடிவாரத்தில், பவானிசாகர் அணைக்கு அருகில் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் 71.32 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. பயிற்சி நிலையத்தினை அமைதியான இப்பகுதியில் அமைக்கப்பட்டதன் நோக்கமே இயற்கையான மாசு இல்லாத சூழலில் பயிற்சியாளர்கள் எவ்வித இடையூறுமின்றி பயிற்சி பெற வேண்டும் என்பதாகும். தொடக்கத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி I, II மற்றும் IV மூலம் தெரிவு செய்யப்படும் பணியாளர்கள், வேலை வாய்ப்பகம் மூலம் தெரிவு செய்யப்படும் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்படும் அமைச்சுப் பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டது. அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி

நிலையத்திற்கு மாற்றப்பட்டதன் பின்னர் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி காலமானது 60 நாட்களிலிருந்து 41 பணி நாட்களாக குறைக்கப்பட்டது. இது பல்வேறு துறைகளில் இருந்த பயிற்சி நிலுவை எண்ணிக்கையை குறைக்க உதவியது.

❖ இப்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்ட போது இருந்த கட்டமைப்பு வசதிகளை உயர்த்தவும், வளாகத்தினை பசுமையானதாக மாற்றிடவும் ரூ.36.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நாட்டிலேயே மிகச் சிறந்த அரசு பயிற்சி நிலையங்களுள் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது.

❖ தொடக்கத்தில், அணி ஒன்றுக்கு 250 பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், அக்டோபர் 2017 முதல் 685 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ பயிற்சி வளாகத்தில் பசுமையான சூழல் ஏற்படுத்தும் பொருட்டு, இருநூறுக்கும் மேற்பட்ட பல்வேறு வகையான 2,793 எண்ணிக்கைகள் கொண்ட மரங்கள் நடப்பட்டு அவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

❖ மேலும் பயிற்சியாளர்களின் வருகையை பதிவு செய்வதற்கு வருகைப் பதிவேட்டிற்கு பதிலாக ஒவ்வொரு வகுப்பறையிலும் Biometric கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் Buggy Vehicle உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் விவரங்களை பிற்சேர்க்கையில் காணலாம்.

<u>பரவலாக்கப்பட்ட பயிற்சி :</u>

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்ட மன்ற பேரவை 110-விதியின் கீழ், புதியதாக அரசுப் பணியில் சேரும் மற்றும் பதவி உயர்வு பெறும் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை பரவலாக்கப்பட்ட பயிற்சியாக அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்கவும், அரசு அலுவலர் பயிற்சி பெறுவதற்கு உள்ள நிலுவையினை குறைக்கவும், உரிய காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்கவும் வழிவகை செய்ய உத்திரவிட்டதால், அதன் தொடர்ச்சியாக, அந்தந்த மாவட்டங்களிலேயே அடிப்படை பயிற்சி வழங்க, 25.10.2021-ல் அரசாணை வெளியிடப்பட்டது.

- பரவலாக்கப்பட்ட பயிற்சி தொடங்கும் முன் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் நிலுவை எண்ணிக்கை 9200. அதில், 6129 அலுவலர்களுக்கு பரவலாக்கப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் 1092 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, 1449 அலுவலர்களுக்கு அடிப்படை பயிற்சி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் மேற்படி நிலுவை முழுவதும் முடிக்கப்படும். இது குறித்த விவரங்களை பிற்சேர்க்கையில் இணைப்பில் உள்ள வரைபடத்தில் காணலாம்.

- மேலும் பயிற்சியாளர்கள் பணியில் சிறப்பாகப் பணிபுரியும் பொருட்டும், உடல் நலம் மற்றும் மனநலம் கருத்தில் கொண்டும் தன்னம்பிக்கை ஊக்குவிக்கும் பயிற்சி, மனநலம் சார்ந்த பயிற்சி, மன அழுத்த மேலாண்மை பயிற்சி, முதலுதவி பயிற்சி, தீ தடுப்பு பயிற்சி, பேரிடர் மேலாண்மை பயிற்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 குறித்த பயிற்சியும் அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்பாடுகள் குறித்த பயிற்சியும் நடத்தப்பட்டு வருகின்றன.

- ❖ பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 1974-ம் ஆண்டிலிருந்து இதுவரை அடிப்படைப் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் உட்பட 1,35,070 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

<u>9(2) (iv) அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம்:</u>

- ❖ 1966 ஆம் ஆண்டு பட்டியல் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த தேர்வர்களுக்கு பயிற்சியளிக்க முன்தேர்வு மையம் தொடங்கப்பட்டது. அதைப் போன்றே, 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக சிறப்புப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது. இவ்விரண்டு மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு "அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்" என்று பெயரிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறைத்தலைவர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் முதல்வரால் நிருவகிக்கப்படுகிறது.

- ❖ மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகள் மூன்று கட்டங்களாக நடத்தப்படுகின்றன. தெரிவுவினா அடிப்படையில் ஒருவரின் தகுதியை அறிந்து, அதன் மூலம் உயர்நிலை முதன்மைத் தேர்வை எதிர் கொள்ள ஆற்றல் கொண்ட தேர்வர்களைக் கண்டறிய முதல்நிலைத் தேர்வு நடத்தப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்கள் புதுதில்லியிலுள்ள மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் ஆளுமைத் தேர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள். முதன்மைத் தேர்விலும், ஆளுமைத் தேர்விலும் பெறும் மதிப்பெண்கள் கூட்டப்பட்டு தரவரிசை நிர்ணயிக்கபடுகிறது.

- ❖ ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தால் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு 325 தகுதி பெற்ற மாணவர்கள் (225 முழுநேரப் பயிற்சியாளர்கள் 100 பகுதிநேரப் பயிற்சியாளர்கள்) இடஒதுக்கீட்டு முறையில் தெரிவு செய்யப்பட்டு, முதல்நிலைத் தேர்வு பயிற்சிக்கு

அனுமதிக்கப்படுகிறார்கள். கிடைமட்ட ஒதுக்கீட்டு முறையில் மாற்றுத் திறனாளிகளும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும், நவம்பர் / டிசம்பர் மாதத்தில் பத்திரிகை மற்றும் பயிற்சி மைய இணையதளத்தில் [www.civilservicecoaching.com](http://www.civilservicecoaching.com) விளம்பரம் கொடுத்து, நுழைவுத் தேர்வு டிசம்பர்/ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டு, நுழைவுத் தேர்வில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். முதல்நிலைத் தேர்வுக்கு ஏறத்தாழ ஆறு மாத கால அளவில் (டிசம்பர் முதல் மே மாதம் வரை) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு நுழைவுத் தேர்வுக்கு இணையவழி மூலமாக 8704 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பயிற்சி நடைபெற்று வருகிறது.

- ❖ ஒவ்வொரு ஆண்டும் முதல்நிலை தேர்வு முடிவுகள் வரப்பெற்றவுடன், வெற்றி பெற்றவர்கள் முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு சுமார் மூன்று மாத காலம் (ஜூலை முதல் செம்படம்பர் வரை) உரிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

முதல்நிலைத் தேர்வில், இப்பயிற்சி மையத்தில் பயின்று வெற்றி பெற்ற மாணவர்கள் அல்லாமல் தமிழ்நாட்டைச் சார்ந்த இதர மாணவர்களும் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 225 மாணவ / மாணவியர்களுக்கு குடிமைப்பணி முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வருமான உச்சவரம்பின்றி மாதம் ஒன்றுக்கு ரூ.3000/- வீதம் மூன்று மாதங்களுக்கு உதவித்தொகை, படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்படுகிறது.

- முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இப்பயிற்சி மையம் மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்திவருகிறது. புதுதில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்கு வெகுநாட்கள் முன்னதாக இது நடத்தப்படுகிறது. மேலும், புதுதில்லியில் ஆளுமைத் தேர்வு நடைபெறும் நாட்களில் குறைந்த கட்டணத்தில் உணவும், தமிழ்நாடு இல்லத்தில் ரூ.100/-ல் 10 நாட்கள் தங்கி இயல்பாக ஆளுமைத் தேர்வினை எதிர்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இவர்களுக்கு

இடைநிகழ்வுச் செலவிற்கு வழங்கப்பட்டு வந்த ரூ.2,000/-ஐ 2021-ஆம் ஆண்டு முதல் ரூ. 5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- ❖ அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தின் பயிற்சிகளை வலைதளத்தில் நேரடியாக ஒளிபரப்புவதற்கு ரூ.33.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ நாடு முழுவதும் உள்ள ஆர்வலர்கள் பயனடையும் வகையில் அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தால் AICSCC TN என்ற பெயரில் Youtube Channel ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதில் 11,10,209 பார்வையாளர்களும், 40200 சந்தாதாரர்களும் உள்ளனர். 1037 காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- ❖ அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தை புதுப்பிக்கும் பொருட்டு கணினிகள், அச்சுபொறி மற்றும் உபகரணங்கள் ரூ.50 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ❖ சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையத்தைப் போன்று, அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்க, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கிராமப்புற மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையம் என்ற பெயரில் இரண்டு பயிற்சி மையங்கள் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி மையங்களில் மத்திய தேர்வாணையத்தின் முதல்நிலைத் தேர்விற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

9(2)(v) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்:

அகில இந்திய குடிமைப்பணி தேர்வு மையம் சிறப்பாக செயல்பட்டு தமிழ் இளைஞர்கள் அதிக அளவில் வெற்றி பெற உதவியுள்ளதின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம், வங்கி பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு துறை பணிகள் மற்றும்

பொதுத் துறை நிறுவனங்களில், வேலைவாய்ப்பை பெறுவதற்காக தமிழ் இளைஞர்களை தயார்படுத்த வேண்டுமென்பதற்காக போட்டித்தேர்வு பயிற்சி மையங்கள் புதிய உத்திகளுடன் செயல்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்கள் இப்பயிற்சி மையத்தினால் பயனடைவதற்கு தகுந்தாற்போல் பாடத்திட்டங்கள், தெரிவுமுறை, மைய அமைவிடம் போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>9(3) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்</u>

- மனித வள மேலாண்மைத் துறையின் கீழ் தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம், இயங்கி வருகிறது.
- தலைமைச் செயலகத்தில் நுழைவுநிலை பதவிகளில் பணியமர்த்தப்படும் அலுவலர்களுக்கு இப்பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையமானது இதுவரையிலும் 100 அணிகளுக்கு பயிற்சியினை வழங்கியுள்ளது.

- தலைமைச் செயலகத்தில் புதிதாக பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி பயனுள்ளதாகவும், பணி தொடர்புள்ளதாகவும் அமையும் பொருட்டு பாடத்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு, 07.01.2020 முதல் புதிய முறையிலான அடிப்படைப் பயிற்சி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- பெருந்தொற்று பரவல் காரணமாக, பயிற்சி நிலையத்தில் நேரடி வகுப்புகள் நடத்த இயலவில்லை. எனவே, அடிப்படைப் பயிற்சி வகுப்புகள் ஒரு மாற்று முறையாக, புதிய முறையில் பயிற்சியாளர்களுக்கு காணொலி பாடங்கள் மின்னஞ்சல் வாயிலாக நடத்தப்பட்டு நிறைவு பெற்றது. இப்பயிற்சி, ஒரு அணியில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்க வழிவகுத்தது.

- தற்போது பெருந்தொற்று பரவல் குறைந்ததன் அடிப்படையில், நேரடி பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு காலை, மாலை என இருவேளைகளிலும் அணிக்கு 40 பேர் வீதமாக இரண்டு அணிகளாக பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

## 10. முன்னோக்கி பயணித்தல்

வெளிப்படைத்தன்மை, துரிதமான செயல்பாடு ஆகியவற்றினை ஊக்குவிக்கும் வகையில். மின்னணு ஆளுகை மூலம் அரசு நிருவாகத்தினை திறம்பட கண்காணிக்கும் வகையில் மின்னணு - அலுவலகம் (e-Office) முறை அறிமுகப்படுத்தப்பட்டு 21.03.2022 முதல் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


## 11. முடிவுரை

அரசு துறைகளில் உள்ள நிருவாக நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளை எளிமைப்படுத்தி பணியாளர் நலன் மற்றும் பொது சேவைகள் மெருகேறும் வண்ணம் எளிமைப்படுத்தி சமச்சீரான உள்ளார்ந்த வளர்ச்சியை இலக்காக கொண்டு இத்துறை செயல்பட்டு வருகிறது.

**முனைவர். பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்.

# தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்


## பல்வேறு பதவிகளுக்கான
## மாவட்ட வாரியாக தேர்வர்கள்
## 2021 - 2022



## தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

### தொகுதி - IV (கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு)


### தேர்வர்களின் கல்வித்தகுதி
### 2015-16, 2016-17, 2017-18, 2018-19 மற்றும் 2019-20




# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## பாலின ஒப்பீட்டு விவரங்கள்
## தொகுதி – IV

### 2015-16, 2016-17 மற்றும் 2017-18




### 2018-19 மற்றும் 2019-20







மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா மேலாண்மை பணியாளர் கல்லூரி வளாகத்தில் மிடுக்கு வகுப்புகள் மற்றும் கூடுதல் தங்கும் விடுதிகளை 04.04.2022 அன்று திறந்து வைத்தார். உடன் மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர்.




மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்கள் 28.03.2022 அன்று, அகில இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்விற்கான பயிற்சியினை தொடங்கி வைத்தார்கள்.




மாவட்டந்தோறும் நடத்தப்படும் பரவலாக்கப்பட்ட அடிப்படை பயிற்சியில் கலந்துகொண்ட அரசு அலுவலர்கள்.




(31.03.2022 வரை பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை – 1,38,419)

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில்
அளிக்கப்பட்ட அடிப்படை பயிற்சிகளின் விவரங்கள்




மாவட்டந்தோறும் பரவலாக்கப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்ட விவரங்கள்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.